தமிழை வாசிப்போம்! நேசிப்போம்! சுவாசிப்போம்!

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்

Kurinji Muthamizh Sangam

# நிகழினி இதழ்

## NIGAZHINI MAGAZINE

ஆசிரியர் : சந்திரா ஸ்ரீதர்

பதிப்பு : 4 | 2024/1



**Editor : Mrs.Chandra Srithar**
**ஆசிரியர் :திருமதி. சந்திரா ஸ்ரீதர்**

ஆசிரியர் இலாகா விளம்பரம் முகவரி
5252 E 130th circle
Thornton
Colorado 80241,USA.
chandra.srithar01@gmail.com

**Co-editor : Master. Suryha Venkataramani**
**இணை ஆசிரியர்:**
**செல்வன். சூரியா வெங்கட்ரமணி**

**குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்**, "நிகழினி இதழ்" தமிழ் சமூகத்திற்காக டிஜிட்டல் வடிவில் வெளியிடுவதில் பெருமை அடைகிறது.

நிகழினி என்றால் மங்கா அறிவொளி பொருந்தியவள், பிரகாசமாக சொலிப்பவள் என்று பொருள்.

இந்த இதழ் தொன்மையான நம் தமிழ்மொழியை நேசிக்கும் மக்களின் சுயபடைப்புகள் மற்றும் நிர்வகிக்கப்பட்ட படைப்புகளை உங்கள் வாசிப்புக்காகக் கொண்டு வரும்.

இந்த இதழில் நிர்வகிக்கபட்ட  படைப்புகள் அனைத்தும் வாசகர்கள் நல்ல தமிழ் படிக்கும் நோக்கத்தில் இடம் பெறுகின்றன.

பேட்டிகள் மற்றும் சிறப்புக்கட்டுரையாளர்களின் கருத்துக்கள் அதை எழுதியவர்களின் சொந்தக் கருத்துகளே!

எந்தவொரு நகல் உரிமைச் சிக்கலுக்கும் உண்மைத்தன்மைக்கும் குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம் பொறுப்பல்ல.

தமிழை வாசிப்போம்! நேசிப்போம்! சுவாசிப்போம்!

குறிஞ்சி முத்தமிழ்ச் சங்கம்

Kurinji Muthamizh Sangam

## ஆசிரியர் பக்கம்

நிகழினி நிரந்தரம்!

இந்த இதழில் உங்கள் பங்களிப்பை வரவேற்கிறோம்.
மகிழ்ச்சியாக வாசியுங்கள்!

வெற்றி பெற்ற மனிதருக்கும்
தோல்வி பெற்ற மனிதருக்கும்
வாழ்க்கையில் வரலாறு உண்டு!
வேடிக்கை பார்த்தவர்களுக்கும்
விமர்சித்தவர்களுக்கும்,
ஒரு வரி கூட கிடையாது!
விமர்சனத்தையும்,கேளியையும்
சுமந்து சென்றால் பாதை முழுக்க
வலியோடுதான் செல்லவேண்டும்!
சுய மதி கொண்டு
உன் விழி கண்டு
வெற்றி வரும் என்று
வலிமையோடு காத்திரு!
வெற்றி நமதே!!
தமிழோடு வாழ்வோம்!
உலகையே ஆள்வோம்!



இங்ஙனம்
**திருமதி.சந்திரா ஸ்ரீதர்**
ஆசிரியர்

என்னால் மறக்கமுடியாத திருக்குறள். எனக்கு மிகவும் பிடித்த திருக்குறள்:

குறள்: 108

"நன்றி மறப்பது நன்றன்று நன்றல்லது
அன்றே மறப்பது நன்று"

பொருள்:

ஒருவர் செய்த நன்மையை மறப்பது நல்ல பண்பு ஆகாது; ஆனால், அவர் செய்த தீமையை அன்றைக்கே மறந்து விடுவது மிகவும் நல்லது.

ஏன் இது எனக்கு பிடிக்கும் என்றால், வாழ்க்கை மிகவும் சிறியது. எனவே வாழ்க்கையை மகிழ்ச்சியுடனும், சந்தோசத்துடனும் வாழவேண்டும். ஆகையால் நற்சொற்கள் மற்றும் பாராட்டுக்களையும் மனதில் வைத்துக்கொண்டு, தீயதை மறப்பதே மகிழ்ச்சியான வாழ்க்கைக்கு வழியாகும்.

அதனால், இந்த திருக்குறள் எனக்கு பிடித்த திருக்குறள் ஆகும்.

நன்றி!

-சூர்யா.





## விருப்பறாச் சுற்றம் இயையின் அருப்பறா
## ஆக்கம் பலவும் தரும்

ஒருவனுக்கு அன்பு நீங்காத சுற்றம் மட்டும் அமைந்து விடுமானால், அவனுக்கு அது வளர்ச்சி குறையாத செல்வங்கள் பலவற்றையும் கொடுக்கும்.

When kindred show unfailing love, Wealth of all kinds never fail to flow..

**திருக்குறள் எண்** : 522
**பால்** : **பொருட்பால்**
**அதிகாரம்** : **சுற்றந் தழால்**

**சுற்றத்தார் அல்லது உறவினர் என்பதற்கு மூதுரை தரும் விளக்கம்**:

" அற்ற குளத்தின் அறுநீர்ப் பறவைபோல்
உற்றுழித் தீர்வார் உறவல்லர்--- அக்குளத்தில்
கொட்டியும் ஆம்பலும் நெய்தலும் போலவே
ஒட்டி யுறுவார் உறவு "

குளத்தில் நீர் வற்றியபோது வேறு நீர்நிலையைத் தேடிச் செல்லும் நீர்ப்பறவைகள் போல் நாம் வறுமையுற்ற காலத்தில் நம்மை விட்டு விலகிச் செல்பவர் உறவினராக மாட்டார். அக்குளத்தில் இருக்கும் கொட்டி, ஆம்பல், நெய்தல் போன்ற நீர்ப்பூக்கள் குளத்தில் நீர்வற்றிய போதும் குளத்தை விட்டு நீங்காதது போல நாம் நலிவுற்ற போதும் நம்முடன் ஒட்டி உறவாடுபவரே உறவினராவார் என்பது அப்பாடலின் பொருள். அப்படிப்பட்ட உறவினர்கள் அபூர்வமாகவே இருப்பர்.

# விருந்தோம்பல்

## திருமதி . ஞானப்பூங்கோதை சுப்பிரமணியன்.

விருந்தோம்பல் —--- தமிழர் பண்பாடு பண்பாடு என்றால் என்ன ?

பண் + பாடு —- இசையோடு பாடுதல் என்றும் ,
பண்படுத்துதல் என்றும் பொருள் கொள்ளலாம் .
நிலத்தில் பயிரிடுவதற்கு முன் பயிரிடுவதற்கு ஏற்ற வகையில் நிலத்தை உழுது விளைச்சலுக்கு ஏற்ற வகையில் நிலத்தைத் திருத்துகிறோம் அல்லது பண்படுத்துகிறோம். அது போலக் காமம், குரோதம்,உலோபம், மோகம், மதம், மாச்சரியம் என்னும் ஆறு அகப்பகைகளை அழித்துச் சிந்தனை, சொல், செயல் ஆகியவற்றைச் செம்மைப்படுத்தி வைத்துக் கொள்வதே பண்பாடு ஆகும் .
அதாவது மனப்பக்குவமே பண்பாடாக வெளிப்படுகிறது. சிறந்த பண்புகளால் நிறைந்து சக மனிதர்களுடன் பொருந்தி அன்புடன் வாழும் மனப்பக்குவம்.
இதைத் தான் கலித்தொகை (133) ,

பண்பெனப் படுவது பாடறிந்து ஒழுகுதல் என்கிறது. அதாவது உலக நடைமுறைக்கு ஏற்ப ஒத்து நடப்பது பண்பு அல்லது பண்பாடு ஆகும் .
**“ பண்புடையார்ப் பட்டுண்டு உலகம் என்கிறது திருக்குறள்”. ( குறள் 996 ).**

**“தமக்கென முயலா நோன்தாள் பிறர்க்கென முயலுநர் உண்மையானே உண்டால் அம்ம இவ்வுலகம் என்கிறது புறநானூறு”. ( புறம் 192 ).**

பண்பாடு என்பது ஓர் இனம் பன்னெடுங் காலமாகப் பழகி வரும் வாழ்க்கை ஒழுக்கம். பணிவுடைமை, சான்றாண்மை, அன்புடைமை, அறமற்ற செயல்களைச் செய்ய நாணுதல், வாய்மை போன்ற பண்புகள் எல்லாம் பண்பாட்டின் அடையாளங்கள்.
தமிழர் பண்பாடு ஏறக்குறைய 2000 ஆண்டு பழமை வாய்ந்தது. தமிழ் மொழிக்கு இலக்கணம் வகுத்த தொல்காப்பியம் அம்மொழி பேசும் மக்களின் வாழ்வியலுக்கும் அகப்பொருள், புறப்பொருள் என இலக்கணம் வகுத்துத் தந்துள்ளது.
இது தமிழ் மொழிக்கே உரிய தனிச்சிறப்பு. தமிழ்மொழி வழங்கும் தமிழக மக்களின் நாகரிகம், பண்பாடு, பழக்க வழக்கம், வாழ்வியல் முறை, ஆட்சிமுறை, போர், வீரம், காதல் போன்றவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்கு போன்ற இலக்கியங்களால் அறியப் படுகின்றன. ஒருவரிடம் நல்ல பண்பாடு இல்லையெனில் அவரிடம் உள்ள அறிவினால் எந்தப் பயனும் இல்லை . பண்பாடு இல்லாதவர்களை மரம் என்று இடித்துரைக் கின்றார் வள்ளுவர் .

**அரம்போலும் கூர்மைய ரேனும் மரம்போல்வர்**
**மக்கட்பண் பில்லா தவர் . ( குறள் 997 ).**

( தொல் . செய்யுளியல் 231 )
அது போலவே விருந்து என்றால் நம் இல்லத்திற்குப் புதிதாக வருபவர் என்பது பொருள் . இன்றைய கால கட்டத்தில் நம் வீட்டுக்கு வரும் உறவினரையும் நண்பர் களையும் தான் விருந்தினர் ( விருந்தாளி ) என்று கொண்டாடுகிறோம் . ஆனால் உண்மையில் உறவினரும் நண்பரும் அல்லாது , புதியவராக ( நமக்கு அறிமுகம் இல்லாதவர் ) நம் இல்லத்துக்கு வருபவரே விருந்தினர் ஆவார் .

அகநானூறும் ,
" விருந்தின் மன்னர் அருங்கலம் தெறுப்ப ,
வேந்தனும் வெம்பகை தணிந்தனன் " ( அகம்54 )
என்பதில் ' புதிய மன்னர்கள் என்ற பொருளிலேயே 'விருந்தின் மன்னர்' என்ற தொடர் ஆளப்பட்டுள்ளது . எனவே புதிதாய் வருபவரை உணவு முதலியவற்றால் உபசரித்தல் விருந்தோம்பல் எனப்பட்டது . இதற்கு இணையான ஆங்கிலச் சொல் Hospitality என்பதாகும் .

இல்லறத்தின் தலையாய கடமை விருந்தோம்பல் என்று திருக்குறளும் , சிலப்பதிகாரமும் , கம்பராமாயணமும் சுட்டுகின்றன .
" விருந்து புறத்ததாத் தானுண்டல் சாவா
மருந்தெனினும் வேண்டற்பாற்று அன்று "
( குறள் 82 )
என்றும் ,
" செல்விருந் தோம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு " ( குறள் 86 )
என்றும் திருக்குறள் விருந்தோம்பலைச் சிறப்பிக்கிறது .

கண்ணகி கோவலனைப் பிரிந்திருந்த காலத்தில் தான் விருந்தோம்பும் தகுதியை இழந்து இருந்ததற்காக வருந்தியதாக இளங்கோவடிகள் குறிப்பிடுவார் .
"அறவோர்க்கு அளித்தலும் அந்தணர் ஓம்பலும்
துறவோர்க்கு எதிர்தலும் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலும் இழந்த என்னை "
( சிலப்பதிகாரம் — கொலைக்களக் காதை )

கம்பராமாயணம் சுந்தர காண்டத்தில் , " விருந்து கண்ட போது என்னுறுமோ என்று விம்மும்" என்று
இராமனைப் பிரிந்த சீதை வருந்துவதாகக் கம்பர் குறிப்பிடுவார் .

கோவலனைப் பிரிந்த கண்ணகியும் , சீதையைப் பிரிந்த இராமனும் விருந்தோம்பும் தகுதியை இழந்து வருந்துவதாகச் சொல்லப்படுகிறது . எனவே விருந்தோம்பல் என்பது கணவனும் மனைவியும் இணைந்தே செய்யும் தொழிலாகக் கூறப்பட்டுள்ளது .

" மருந்தே ஆயினும் விருந்தோடு உண் " என்கிறது கொன்றை வேந்தன் .

" இந்திரர் அமிழ்தம் இயைவ தாயினும்
இனிதெனத் தமியர் உண்டலும் உலர் "( புறம் 182 )
என்று புறநானூறு போற்றுகிறது .

**" ஒப்புடன் முகமலர்ந்து உபசரித்து உண்மைபேசி**
**உப்பிலாக் கூழிட்டாலும் உண்பதே அமுதமாகும் ."**
என்று விவேக சிந்தாமணி விருந்தினரை எப்படி உபசரிக்க வேண்டும் என்று உணர்த்துகிறது .

**" தென்புலத்தார் தெய்வம் விருந்து ஒக்கல்**
**தான்என்றாங்கு**
**ஐம்புலத்தாறு ஓம்பல் தலை " ( குறள்**
**என்று இல்லறத்தாரின் 11 கடமைகளுள் ஒன்றாக விருந்தோம்பலைக் குறிப்பிடுகிறது திருக்குறள் .**
**" உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோர் "** என்று புகழ்கிறது மணிமேகலை .
**( மணிமேகலை )**

**விருந்தோம்பல் – அன்றும் இன்றும்**

நம்முடைய அடிப்படைத் தேவைகளில் முதன்மை யானது உணவு . பன்னெடுங் காலத்திற்கு முன் ஓரிடத்திலிருந்து வேறிடத்திற்குச் செல்ல வேண்டு மானால் கால்நடையாகத் தான் செல்ல வேண்டும்.
இன்று போல் அன்று உணவு விடுதிகள் இல்லாமையால் சில சமயம் கட்டுச் சோறு ( ஆற்றுணா ) கட்டிக் கொண்டு செல்வார்கள் . பல சமயங்களில் தங்கள் உணவுக்கும், தங்குமிடத்துக்கும் அவர்கள் செல்லும் ஊர்களையே நம்ப வேண்டி யிருந்தது . இதனாலேயே விருந்தோம்பல் பண்பு தமிழகத்து இல்லங்களில் தோன்றலாயிற்று . இவ்வாறு வழிநடைப் பயணமாகச் செல்பவர்கள் தங்கிச் செல்வதற்காகவே அக்கால வீடுகளில் பெரிய திண்ணை கள் வைத்துக் கட்டினார்கள் . அப்படி வருபவர்களிடம் இன் முகம் காட்டி , இன்சொல் பேசி வரவேற்று உபசரிப்பதே விருந்தோம்பலில் முதல் படியாகும் .

" **அல்லில் ஆயினும் விருந்துவரின் உவக்கும் "**
**( நற்றிணை 142 )**

என்று சங்க கால மகளிர் நள்ளிரவில் விருந்தினர் வந்தாலும் முகம் கோணாது அவர்களை வரவேற்று உணவளித்து உபசரித்தமையைக் குறிப்பிடுகிறது. "அன்ன சத்திரம் ஆயிரம் வைத்தல் " என்று பாரதியார் பாடியது போல், வழிப்போக்கர்களுக்குக் காசு வாங்காமல் உணவளிக்கும் அன்ன சத்திரங்களும் தண்ணீர்ப் பந்தல்களும் அக்காலத்தில் நிறையவே இருந்தன.

ஆனால் இக்காலத்தில் விருந்து என்பதற்கு வீடுகளிலோ விழாக்களிலோ செய்யப்படும் சிறப்பு உணவு ஏற்பாடு என்றே பொருள் கொள்கிறோம்.

இக்காலத்தில் தரை வழியாகவோ, வான் வழியாகவோ பயணம் செய்வதற்குப் போக்குவரத்து வசதிகள் உள்ளன. அதனால் ஓரிடத்திலிருந்து வேறிடம் செல்வதற்கு அதிக நேரம் பிடிப்பதில்லை. அது மட்டுமல்லாமல் இன்று எல்லா ஊர்களிலும் காசு கொடுத்து உண்டு உறங்கும் விடுதிகள் நிறைய உள்ளன. எனவே அக்கால விருந்தோம்பும் முறை இக்காலத்தில் வெகுவாகக் குறைந்துவிட்டது என்றே சொல்ல வேண்டும். ஆகவே இக்காலத் தேவைக்கேற்ப நம்மால் இயன்ற வகையில் விருந்தோம்பலைப் போற்றுவோம்.

## திரு. சுகுமாறன் மாரியப்பன்

### ENERGY GIVERS

- Sunlight
- Laughter
- Hydration
- Breathing
- Wholesome food
- Dance
- Nature
- Fresh air
- Movement
- Sleep + Rest
- Meditation
- Art/Creativity
- Being present

### ஆற்றல் கொடுப்பவர்கள்

- சூரிய ஒளி
- சிரிப்பு
- நீரேற்றம்
- சுவாசம்
- ஆரோக்கியமான உணவு
- நடனம்
- இயற்கை
- சுத்தமான காற்று
- இயக்கம்
- தூக்கம் + ஓய்வு
- தியானம்
- கலை / படைப்பாற்றல்
- முன்னிலையில் இருப்பது

### ENERGY TAKERS

- Fear
- Stress
- Resentment
- Overthinking
- Overworking
- Negativity
- No movement
- Mess + Clutter
- Junk Food
- Dehydration
- Sloppy boundaries
- Excess screentime
- Living in the past

### ஆற்றல் எடுப்பவர்கள்

- பயம்
- மன அழுத்தம்
- மனக்கசப்பு
- அதிகப்படியான யோசனை
- அதிக வேலை
- எதிர்மறை
- இயற்கை இல்லை
- குழப்பம் + ஒழுங்கீனம்
- சத்தற்ற உணவு
- நீரிழப்பு
- சீரற்ற எல்லைகள்
- அதிகப்படியான திரை நேரம்
- கடந்த காலத்தில் வாழ்வது





The owner of this car is from Denmark. He didn't start his car for a month Until this dove hatched his eggs. He said: "While she chooses my car to build her nest, I'll match her spirit. Humanity is not a religion but a class that some humans achieve.


இந்த காரின் உரிமையாளர் டென்மார்க்கை சேர்ந்தவர். இந்த புறா தனது முட்டைகளை பொரிக்கும் வரை அவர் ஒரு மாதமாக தனது காரை ஸ்டார்ட் செய்யவில்லை. அவர் கூறினார்: "அவள் கூடு கட்ட என் காரைத் தேர்ந்தெடுக்கும் போது, நான் அவளுடைய ஆவியுடன் ஒத்துப் போகிறேன். மனிதநேயம் ஒரு மதம் அல்ல, ஆனால் சில மனிதர்கள் அடையும் ஒரு வர்க்கம்.

**First rule of mental health:**

Learn to distinguish who deserves an explanation, who deserves only one answer and who deserves absolutely nothing.

**ஆரோக்யமான மன நலத்திற்கு முதல் விதி:**

யார் நமது விளக்கத்திற்கு தகுதியானவர்,
யார் வெறும் ஒரு பதிலுக்கு தகுதியானவர்,
யார் எந்த விளக்கத்திற்கும் தகுதியானவர் இல்லை என்பதை பிரித்தறிவதை கற்றுக்கொள்ளுங்கள்.





**Who is your life partner?**
Mom? Dad? Wife? Son? Husband? Daughter? Friends? Not at all! Your real-life partner is your body. Once your body stops responding no one is with you. You and your body stay together from birth till death. What you do to your body is your responsibility and that will come back to you. The more you care for your body, the more your body will care you. What you eat, What you do for being fit, How you deal with stress, how much rest you give to it; will decide how your body going to respond. Remember, your body is the only permanent address where you live. Your body is your asset/liability, which no else can share. Your body is your responsibility. Because you are the real-life partner. Be fit. Take care of yourself. Money comes and goes. Relatives and Friends are nor permanent. Remember, no one can help your body other than you.
Pranayama – for Lungs
Meditation – for Mind
Yoga – for Body
Walking – for Heart
Good food – for Intestines
Good thoughts – for Soul
Good karma – for World



**உங்கள் வாழ்க்கை துணை யார்?**
அம்மா? அப்பா? மனைவியா? மகனா? கணவனா? மகளா? நண்பர்கள்? இல்லவே இல்லை! உங்கள் நிஜ வாழ்க்கை துணை உங்கள் உடல். உங்கள் உடல் பதிலளிப்பதை நிறுத்தியவுடன் யாரும் உங்களுடன் இல்லை. நீங்களும் உங்கள் உடலும் பிறப்பு முதல் இறக்கும் வரை ஒன்றாக இருக்கிறீர்கள். உங்கள் உடலுக்கு நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பது உங்கள் பொறுப்பு, அது உங்களிடம் திரும்பும். உங்கள் உடலை நீங்கள் எவ்வளவு அதிகமாக கவனித்துக்கொள்கிறீர்களோ, அவ்வளவு அதிகமாக உங்கள் உடல் உங்களை கவனித்துக் கொள்ளும். நீங்கள் என்ன சாப்பிடுகிறீர்கள், ஆரோக்கியமாக இருக்க என்ன செய்கிறீர்கள், மன அழுத்தத்தை எப்படி சமாளிக்கிறீர்கள், அதற்கு எவ்வளவு ஓய்வு கொடுக்கிறீர்கள்; உங்கள் உடல் எவ்வாறு பதிலளிக்க வேண்டும் என்பதை தீர்மானிக்கும். நீங்கள் வசிக்கும் இடத்தில் உங்கள் உடல் மட்டுமே நிரந்தர முகவரி என்பதை நினைவில் கொள்ளுங்கள். உங்கள் உடல் உங்கள் சொத்து/பொறுப்பு, இதை வேறு யாரும் பகிர்ந்து கொள்ள முடியாது. உங்கள் உடல் உங்கள் பொறுப்பு. ஏனென்றால் நீங்கள் தான் நிஜ வாழ்க்கை துணை. பொருத்தமாக இருங்கள். உங்களை பார்த்து கொள்ளுங்கள். பணம் வந்து சேரும். உறவினர்களும் நண்பர்களும் நிரந்தரமானவர்கள் அல்ல. நினைவில் கொள்ளுங்கள், உங்களைத் தவிர வேறு யாரும் உங்கள் உடலுக்கு உதவ முடியாது.
பிராணயாமம் - நுரையீரலுக்கு
தியானம் - மனதிற்கு
யோகா - உடலுக்கு
நடைபயிற்சி - இதயத்திற்கு
நல்ல உணவு - குடலுக்கு
நல்ல எண்ணங்கள் - ஆன்மாவிற்கு
நல்ல கர்மா - உலகத்திற்கு






திருமதி. சரண்யா திருநாவுக்கரசு

## உழைப்பே அதிர்ஷ்டம் தரும்

ஒரு விவசாயிக்கு வயது அதிகமானதால் இறக்கும் தருவாயில் இருந்தார். தம் பிள்ளைகள் பொறுப்பில்லாமல் இருப்பதை பற்றி கவலையாக இருந்தார். ஒரு நாள், அவர் தம் பிள்ளைகளை அருகில் அழைத்தார். தன்னுடைய நிலங்களை அவர்களுக்குப் பிரித்துக் கொடுத்தார்.

அது மட்டுமல்லாமல், அந்த நிலங்களில் ஓரிடத்தில், ஓரடி ஆழத்தில் புதையல் இருப்பதாகச் சொன்னார். அதைத் தேடி எடுத்துக்கொள்ளும்படிச் சொல்லிவிட்டு இறந்து போனார்.

பிள்ளைகள் மூவரும் தந்தைக்குச் செய்ய வேண்டிய இறுதிக் காரியங்கள் அனைத்தையும் செய்தார்கள். அதன்பின், அவர் குறிப்பிட்டிருந்த புதையலை எடுப்பதற்காக நிலத்தைத் தோண்ட ஆரம்பித்தார்கள்.

முதலில் மூத்த மகனின் நிலம் முழுவதையும் ஒரு அடி ஆழத்துக்கு தோண்டினார்கள். புதையல் எதுவும் கிடைக்கவில்லை. ஒருவேளை, அப்பா “இரண்டடி” என்று சொல்வதற்கு பதிலாக “ஓரடி” என்றசொல்லிவிட்டாரோ என்ற சந்தேகத்தில் பிள்ளைகள் மூவரும் சேர்ந்து, மூத்தவனின் நிலத்தை இன்னும் ஓரடி ஆழமாகத் தோண்டினார்கள். அப்போதும் அவர்களுக்குப் புதையல் கிடைக்கவில்லை.

எப்படியும் புதையலைக் கண்டுபிடித்து விட வேண்டும் என்ற வெறியில், இரண்டாவது மகனின் நிலத்தையும் இரண்டடி வரை தோண்டினார்கள். ஏமாற்றம்தான் மிஞ்சியது.

‘இவ்வளவு தூரம் வந்தபின் எப்படி விட முடியும்’ என்று கடைசி மகனின் நிலத்தையும் இரண்டடி தோண்டினார்கள். மறுபடியும் ஏமாற்றமே!

அப்பா மேல் வருத்தம் வந்தாலும், அவர்கள் ‘சரி.. தோண்டியது வீணாக வேண்டாம்’ என்று எண்ணி, அந்த நிலங்களில் விதை விதைத்தார்கள். நீர் பாய்ச்சினார்கள், உரம் போட்டார்கள். உழைப்பு வீண் போகுமா? ஆண்டு முடிவில் அவர்கள் நிலத்தில் அமோக விளைச்சல். அறுவடை செய்து விற்றதில் அவர்களுக்குக் கொள்ளை லாபம்.

இப்படி உழைப்பால் வரும் பயனைத்தான் அப்பா புதையல் என்று குறிப்பிட்டார் என்று பிள்ளைகள் மூவரும் புரிந்து கொண்டார்கள்.

## உங்களுக்கு தெரியுமா?



**செல்வி . கிருப்பன்யா சுரேஷ் பாபு**

1.பூமியில் இருந்து பார்க்கக்கூடிய பிரகாசமான கிரகம் எது?

2.தொட்டவுடன் இறக்கும் பறவை எது?

3.உலகின் மிகப்பெரிய உப்பு ஏரி எந்த நாட்டில் உள்ளது?

4.வயிற்றில் பல் இருக்கும் உயிரினம் எது?

5.பின்வரும் உயிரினங்களில் கண்கள் இல்லாத உயிரினம் எது?
வௌவால்
மண்புழு
தேனீ
எறும்பு

விடை:
1.வீனஸ் (வெள்ளி)
2. டைட்டோனி பறவை
3.ரஷ்யா
4. நண்டு
5. மண்புழு

# புதிய வார்த்தைகளை உருவாக்குக

**- அமென்டா லினெட்**






எழுத்தாளர் திருமதி. அனு அசோக்



ஜெயம் - 3

மறுநாள் பொன் காலைப்பொழுது... அயர்ந்த உறக்கத்தினால் சற்று தாமதமாகவே துயில் களைந்து கீழே வந்த இந்து, உரிமையாக அவர்கள் வீட்டு சோஃபாவில் அமர்ந்து அவளது தந்தையுடன் பேசிக் கொண்டிருந்தவனை கண்டதும் ஆணியடித்தது போல் அதிர்ந்து நின்று விட்டாள்.

எதிர்ப்பாராத அதிர்ச்சியில் ஸ்தம்பித்து விநாடிப்பொழுதில் சுதாரித்துக் கொண்டவள், "இவன் எதற்கு இங்கே வந்தான்...? அதுவும் காலையிலே ஜாக்கிங் டிரஸ்ல அட்டெண்டன்ஸ் போட்டிருக்கான்... சிந்தனையுடனே படிகளில் இறங்க...

அரவம் கேட்டு திரும்பியவன், "ஹாய்! குட் மோர்னிங்" மலர்ந்த முகத்துடன் இயல்பாக தலையசைத்து சொன்ன பாங்கு... அவளை பதில் சொல்ல விடாமல் வாயடைத்து நிற்க வைத்தது.

அந்நேரம், உள்ளிருந்த வெளிப்பட்ட கஸ்தூரி, சூர்யா விஷ் செய்ததையும் அதற்கு எந்தப் பிரதிபலிப்பும் இல்லாமல் அவரது மகள் நின்று கொண்டிருக்கும் நிலையையும் பார்த்து, "வீட்டுக்கு வந்தவங்களை வாங்கன்னு சொல்லு மது...!" அழுத்தத்துடன் கூறிவிட்டு விருந்தினரை உபசரிப்பதற்காக முன்னே செல்ல...
'காட்! இந்த மாம், இவன் முன்னாடி என்னை சிறுபெண்ணைப் போல நடத்தாமல் இருந்தால் பெட்டர்...' முனகிக்கொண்டே தாயைத் தொடர்ந்தாள் பெண்.

அவளது முனகலை விஷமப் புன்னகையுடன் பார்த்துக்கொண்டே கஸ்தூரி நீட்டிய ட்ரேயிலிருந்து கப்பை எடுத்தவன், "நோ பார்மாலிட்டீஸ் ஆண்ட்டி! அவங்க என்னை வெளிய போடான்னு சொல்லாம இருக்கிறதே பெரிய விஷயம்." விளையாட்டு போல வினையத்துடன் கூறியதை கேட்டு மூத்தவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டார்கள் என்றால், 'தன்னை எரிச்சல் படுத்தவே இப்படி பேசுகிறான் என்று புரிந்து போனதில்...' "வாங்க" என்று வரவேற்க வந்த வாயிற்கு மானசீகமாக பெரிய பிளாஸ்ட்டரை போட்டுக் கொண்டு முறைப்புடன் நின்றாள் அவர்களது புதல்வி.

சூர்யா அத்துடன் விட்டிருந்தால் கூட பரவாயில்லை... அவளை அதீத கோபத்திற்கும், எரிச்சலுக்கும் ஆளாக்க வேண்டும் என்று கங்கணம் கட்டிக்கொண்டு வந்திருப்பான் போல...
பெண்ணின் கோபாவேசமான முகபாவத்தை பார்த்து நிலைமையை சுமூகமாக்க விரும்பிய ஜனார்த்தனன், "சந்திரன் உங்களை பற்றி சொன்னதுல இருந்து நானும் உங்களை மீட் பண்ணனும்னு நினைச்சிட்டு இருந்தேன் சூர்யா...! நீங்களே வீடு தேடி வந்ததுல எங்களுக்கு சந்தோசம் தான்..."

ஒருவாறாக சமாளிப்புடன் முடிக்க...

"நோ...நோ, நீங்க ரொம்ப அனுபவசாலி... நான் வந்து உங்களை பார்க்கிறது தான் மரியாதை...! முன்னாடியே வந்திருப்பேன்... உங்க டாட்டர் ரெகமண்ட்டேஷனுக்காக தான் உங்களை பார்க்க வந்தேன்னு சொல்லிருப்பாங்க...
என் மேல அவங்களுக்கு அவ்ளோ குட் ஒபீனியன்..." இடக்காக கூறியதோடு, "என் சிஸ்டர் கேஸை எடுத்துக்கிறதுக்கு அவங்க சம்மதம் சொன்னதா கமிஷனர் போன் பண்ணி சொன்னார்... அதான் உடனே உங்களை பார்க்க வந்துட்டேன்...!" சுருக்கமாக இயம்பி புன்னகைத்தான்.
சூர்யா சொன்னாலும் சொல்லாவிட்டாலும் இந்து, அவனை பற்றி அப்படித்தான் நினைத்திருப்பாள் என்பது இருநூறு சதவிகிதம் உண்மை என்றாலும், அதை அவன் முன்கூட்டியே புரிந்து கொண்டு சொன்ன விதம் மேலும் எரிச்சலைக் கூட்ட, "நான் வொர்க்கவுட் முடிச்சிட்டு வரேன் டாட்..." தந்தையைப் பார்த்து சொல்லிவிட்டு விறுவிறுவென்று வெளியே சென்று விட்டாள்.
ஜனார்த்தனனுக்கு சூர்யாவின் பேச்சு ஆச்சர்யத்தை கொடுத்தாலும், சற்று சுவாரஸ்யத்துடனே அவனை அளவிட்டுக் கொண்டிருந்தார். அவருக்கும் அவர் மகளுக்கும் தலைமுறை இடைவெளி என்பது என்றுமே இருந்தது இல்லை... இந்து தனது தந்தையைப் பற்றிய ஹீரோ இமேஜை இம்மியளவும் குறைய விடாமல் கட்டிப் காப்பதற்கு அதுவும் ஒரு முக்கிய காரணம். அந்த அளவிற்கு இளைய தலைமுறையினரை பற்றிய புரிதல் ஜனாவிற்கு உண்டு... அதனால்தான் தான் அவரது மகளை வாயடைக்கச் செய்தவனுடைய பேச்சை கூட அவரால் ரசிக்க முடிகிறது. முன்தினம் இந்து அவனிடம் நடந்து கொண்ட விதத்தை பற்றியும், சூர்யா அதற்காக ஆத்திரப்பட்டு தனது பதவியையோ, அதிகாரத்தையோ பயன்படுத்தாமல் ஜென்டில்மேனாக நடந்து கொண்டதை பற்றியும் சந்திரனும், வெங்கட்டும் வேறு தனித்தனியாக அவரிடம் பகிர்ந்திருந்தனர். இப்பொழுது கூட அவனது வார்த்தைகள் அவளை காயப்படுத்திவிடும் நோக்கத்துடனோ, இகழ்ச்சியுடனோ இல்லாமல்... சிறு கேலியுடன் கூடிய போட்டி மனப்பான்மையை மட்டுமே எதிரொலிப்பதை மென்னகையுடன் பார்த்திருந்தவர்

“ஷி நோஸ் வெரி வெல் அபௌட் யுவர் கேப்பபிலிட்டி அண்ட் ஸ்டெரங்த் சூர்யா...! அதை ஒத்துக்கத் தான் மனசு இல்லை... கூடிய சீக்கிரம் ஒத்துக்கொள்வாள்...” இலகுவாக கூறிவிட்டு, “ஐ வாஸ் சர்ப்ரைஸ்ட்! உங்க பீரியட்ல தான் பார்க்கிறேன்... ஹையர் போஸ்ட்ல நிறைய யங்ஸ்டர்ஸ் இருக்கீங்க... உங்களை மாதிரி இளைஞர்களோட ஆக்கப்பூர்வமான செயல்கள் தான் இந்த சிட்டிக்கும், நம்ம நாட்டுக்கும் இப்போ அதிகம் தேவைப்படுது... உங்க அச்சிவ்மென்ட்ஸ் தான் எங்களை மாதிரி சீனியர் ஆபீசர்ஸ்க்கும் எல்லாம் பெருமை சேர்க்கும்...

நேற்று நானும் சந்திரனும் கூட இதைப்பற்றி ரொம்ப நேரம் டிஸ்கஸ் பண்ணிட்டு இருந்தோம்..” அவர் தொடர்ந்து பேசிக் கொண்டிருக்க...‘இந்துமதி தனது அப்பாவின் பெயரில் அளவற்ற மதிப்பையும், அன்பையும் வைத்திருப்பதிலும், அவரை தலையில் தூக்கி வைத்து கொண்டாடுவதிலும் தவறே இல்லை...’ என்ற வியப்பு கலந்த எண்ணத்துடனே அவரது உற்சாகமிகுந்த அடைமழை பேச்சிற்கு குடை பிடிக்கும் உத்தேசமின்றி விருப்பத்துடனே நனைந்து விடை பெற்று வெளியே வந்தவன்... லானில் நின்று உடற்பயிற்சிகள் செய்து கொண்டிருந்தவளைப் பார்த்ததும் அவளை நோக்கிச் சென்றான்.

வீட்டிலே டிரெட்மில், எலிப்டிகல், ரோயிங் மெசின் என்று அனைத்து விதமான உடற்பயிற்சி உபகரணங்கள் இருந்தாலும், அதிகாலையில் எழுந்து இயற்கை காற்றை சுவாசித்தபடி கடற்கரை ஓரமாக ஜாகிங் செய்வதை வழக்கமா வைத்திருப்பவள், இன்று சற்று தாமதமாக எழுந்ததால், வீட்டை சுற்றியிருந்த லானை பத்து முறை சுற்றி ஓடினால் ஒரு மைல் என்ற கணக்கில் இருபது முறை சுற்றி விட்டு ஸ்ட்ரெச்சிங் செய்து கொண்டிருந்தாள். தன்னிடம் தான் பேச வருகிறான் என்று தெரிந்ததில் பயிற்சியை நிறுத்தி விட்டாலும், அவனுக்காக காத்திருப்பது போல் இருக்கக்கூடாது என்பதால் தோளின்மேல் கிடந்த சிறிய டவலை கொண்டு வைரக்கற்களாக முகத்தை அலங்கரித்திருந்த வியர்வையைத் துடைத்தவள், முன்னே வந்து நின்றான் சூர்யா... முதல் முறையாக நேருக்கு நேராக வெகு அருகில் அவளை சந்திக்கிறான்.

காலை உதயத்தின் ஒளியை விஞ்சும் ஒளியுடன் அவளது முகம் பிரகாசிப்பது அவனது கண்களை நிறைத்தாலும், கருத்தை நிறைக்காமல் போனது! அந்தோ பரிதாபம்..

‘என்ன’ என்பது போல நெற்றி சுருங்க ஒரு வித எரிச்சலுடன் பார்த்தாள் அவள்... அந்த இளங்காலை வெயிலிலும் இரண்டு வானவில்லை ஒன்றாக கண்டதில் அதிசயத்தவன், இதழ்களில் மெல்லிய புன்னகை ஒன்று படர்ந்தது.

கண்களை மறைத்திருந்த ஓக்லே கூலர்ஸை நெற்றிக்கு மேல் நகர்த்திவிட்டு அவளது கண்களுக்குள் உற்று நோக்கி “தேங்க்ஸ்” ஆழ்மனத்திலிருந்து கூறினான். உணர்ந்து வெளிப்படுத்திய வார்த்தைகளில் ஒரு கணம் உறைந்தவளது திடத்தை அவனது கண்களில் தெரிந்த உணர்வு அசைத்துப் பார்க்க... தடுமாறிய மனம் இலகுவதற்குள் மூளை எச்சரிக்கை செய்தது. ‘நேற்று அவள் பேசியதற்கு எல்லாம் ஒன்றும் தெரியாத மௌனச் சாமியாரைப் போல இருந்துவிட்டு... இன்று சந்தரப்பம் வாய்த்ததும் பதிலடி கொடுக்கும் விதமாக அவளை விமர்சித்தவனின் மேல் உள்ள கோபத்தை இழுத்து பிடிப்பதற்கான காரணங்களை மூளை வரிசைப் படுத்தியதில் பற்கள் நறநறத்தன'.“ரொம்ப சந்தோஷப்படாதிங்க மிஸ்டர் சூர்யப்பிரகாஷ்! உங்க கேஸை எடுத்துக்கிட்டாலும், உங்களை பற்றிய ஒப்பீனியனை நான் கொஞ்சமும் மாத்திக்கப் போறது இல்லை.

இப்பவும் சொல்றேன் உங்களால என்னை பணியவைக்கவே முடியாது...” அழுத்தம் கலந்து அதிரடியாக வந்து விழுந்த வார்த்தைகள் சுருக்கென்று அவன் இதயத்தை தைக்கத்தான் செய்தன.
‘மை காட்! மனம் முழுக்க தன்னை பற்றிய தவறான யூகத்தை மூட்டை மூட்டையாக சேர்த்து வைத்திருக்கிறாள்’ சிறு ஆதங்கத்துடன் அவளை ஆழ்ந்து பார்த்துக்கொண்டே எண்ணமிடுகையில் இனம் விளங்காத வருத்தம். இதயத்தைக் கவ்வினாலும், அதரங்கள் புன்னகையில் விரிந்தன... “உங்க ஒப்பீனியன் மாறுமா மாறாதான்னு இப்பவே எப்படி சொல்ல முடியும் இந்து...! நீங்க சொல்ற மாதிரி இந்த சிட்டியையும், உங்களையும் என் கண்ட்ரோல்ல கொண்டு வந்து காட்டிட்டா? அதுக்கு அப்புறம் உங்க ஒபீனியன் மாறுமோ என்னவோ? ஹூ நோஸ்...? சீண்டலாக வந்த பதில் கொதிநிலைக்கு தூபம் போட்டுவிட...“கால் மீ இந்துமதி...” பட்டென்று சொன்னவள்... சிக்ஸ் பேக் உடற்கட்டையும், உருண்டு திரண்ட புஜங்களையும் அளவாக, அம்சமாக எடுத்துக்காட்டிய அடிட்டாஸ் டீ ஷர்ட்டில் முன்தினம் பார்த்ததைவிட வெகு இளமையாக தெரிந்தவனை வெறுப்புடன் பார்த்தாள்.“கூல் கூல்... உங்களுக்கு இந்துமதின்னு பேர் வைத்ததிற்கு பதிலாக மஸ்டட்ன்னு வைத்திருக்கலாம்...! மோர்னிங் டைம்லயே இப்படி பொறியாதிங்க ஹெல்த்துக்கு நல்லது இல்லை...” அப்பாவியாக முகத்தை வைத்துக் கொண்டு அறிவுரை போல சொன்னவன், அவளது மின்வெட்டு பார்வையை பரிசாகப் பெற்றுக் கொண்டு “ஹேவ் எ நைஸ் டே மிஸ்.மஸ்டட்...சாரி இந்துமதி ” புன்னகை மாற முகத்துடன் திரும்பி நடந்தான்.

காலங்கார்த்தால வந்து என்னை வெறுப்பேத்திட்டு ஹேவ் எ நைஸ் டேன்னு நக்கல் வேறையா...? சரியான டெவில்... டெவில் டாக்கர்...!" முகச்சுளிப்புடன் போகிறவனின் முதுகை வெறித்துவிட்டு வீட்டிற்குள் சென்றாள்.
இந்துவின் மனநிலைக்கு எதிர்மறையாக அவளிடம் பேசிவிட்டு உதடுகள் மென்னகையில் நெளிய தனது காரை நோக்கி சென்றவன், மனநிலையில் புதுவித மாற்றம் நேர்ந்திருந்தது. வெகுநாட்களுக்கு பிறகு ஒரு பெண்ணிடம் இலகுவாக பேசியிருக்கிறான். அவனது தங்கை மட்டும் தான் அவனுடன் இப்படி சரிக்கு சமமாக சண்டையிடுவாள். ஸ்ரீஷாவின் திருமணத்திற்குப் பிறகு அவனது சுபாபம் அவளுடனான நெருக்கத்தை குறைத்து அவனை தனிமைப் படுத்தியிருந்தது. இப்பொழுது அந்த தனிமையும், இறுக்கமும் தளர்வுற்றதாக உணர்ந்ததில் புத்துணர்வு மலர்ந்தது.

இரண்டு மாதங்களாக உடன் பிறந்தவளின் இழப்பிலே உழன்றவன், இதே சென்னையில் இருவரும் ஒன்றாக பள்ளிக்குச் சென்று வந்த பசுமையான நினைவுகளை சுமந்தபடி இல்லத்தை நோக்கி பயணிக்க... அதை தொடர்ந்து அண்ணன் தங்கைக்குள் நடந்த சுவாரஸ்யமான பேச்சுக்களும், இனிமையான சம்பவங்களும் உள்ளத்தின் விளிம்பிலிருந்து ஒவ்வொன்றாக சொட்டத் துவங்கின.“ஜான், மேடம் வந்திட போறாங்க அந்த சிகரெட்டை கீழ போட்டுட்டு வந்து தொலைடா...” பலமுறை சொல்லி அலுத்துப் போன முரளி, எரிச்சலை தேக்கிய குரலில் கூறியும்... சிறிதும் அலட்டிக்கொள்ளாமல் கடைசி புகையை ரசனையுடன் ஊதிய பிறகே சிகரெட்டை கீழே போட்டு, பூட்ஸ் காலால் நெரித்துவிட்டு அவனருகில் வந்தவன், “ஏன்டா முரளி! நம்ம டி.ஸி மேடத்துக்கு என்ன வயசு இருக்கும் நினைக்கிற? அதிமுக்கியமான கேள்வி ஒன்றை கேட்டான். இருவரும் காவல்துறை ஆணையரின் அலுவலக வாசலிலிருந்த ஒரு மரத்தின் கீழ் நின்றிருந்தனர்.

“என்ன இருபத்தைந்து இல்ல இருபத்தாறு இருக்கும் எதுக்குடா கேட்கிற...? பதில் கேள்வி எழுப்பியதற்கு...
“இல்ல யாருக்கு கொடுத்து வச்சிருக்கோ தெரியலை...?” பெருமூச்சுடன் சொன்னவனை மேலும் கீழும் பார்த்தவன், “எனக்கென்னவோ நீ இந்த போலீஸ் டிப்பார்ட்மெண்ட்ல நிலைச்சு இருப்பேன்னு தோணலைடா?” உதட்டை பிதுக்கி தலையை இடவலமாக ஆட்டினான்.
“ஏன்டா பாவி! இப்படி சொல்ற...? இப்ப தானே சப்-இன்ஸ்பெக்டரா ப்ரமோஷன் ஆகிருக்கேன்.” என்றவனிடம் “அந்த ஆட்டோல என்ன எழுதி இருக்கு கொஞ்சம் படி...” சற்று தள்ளி நின்றிருந்த ஆட்டோ ஒன்றை முரளி சுட்டிக்காட்ட, “உன் வாழ்க்கை உன் கையில்லுன்னு எழுதி இருக்கு அதுக்கு என்னடா?” கடுப்புடன் கேட்டான் மற்றவன்.

“அந்த வாசகத்தை அப்படியே உன் வாழ்க்கை உன் வாயில்லுன்னு மாத்திக்கோ அது தான் உனக்கு பொருத்தமா இருக்கும்... நம்ம டி. ஸியை பற்றி என்ன நினைச்ச? சொடக்கு போடுற நேரத்துல உன் லொள்ளை எல்லாம் கண்டு பிடிச்சிடுவாங்க... ஏதோ நம்ம நல்ல நேரம் இந்த கேஸ்ல அவங்களுக்கு கீழ வொர்க் பண்ற சான்ஸ் தானா நம்மை தேடி வந்திருக்கு... அதை பயன்படுத்திக்கிட்டு எப்படியாவது படிப்படியா வந்துடனும்டா ஜான்...” அவன் சீரியஸாக சொல்லி கொண்டிருக்க... “ஆமாண்டா முரளி! அந்த வொண்டர்வுமனுக்கு கீழ வொர்க் பண்றதை நான் பிறவி பாக்கியமாவே நினைக்கிறேன்...”

இப்படி கூறியவனை நீ அடங்கவே மாட்டியா என்பது போல பார்த்தான் முரளி... இருவரும் பேசிக்கொண்டே கமிஷனரின் அலுவலக அறைவாயிலை அடைந்த நேரம், உள்ளிருந்து வெளிப்பட்டாள் இந்து... ஆண்கள் இருவரும் அவள் முன்னால் சென்று நின்று சல்யூட் வைக்கவும், தொப்பியை தலைக்கு கொடுத்துக்கொண்டே அவர்களை ஏறிட்டவளுக்கு முரளியை பற்றி முன்பே பரிச்சயம் உண்டு என்பதால், ஜான் முகத்தில் சாதரணமாக படிந்த கண்களில் கூர்மை கூடிக்கொண்டே சென்றது. அவளது பார்வையை ஆர்வமாக எதிர்க்கொண்ட ஜான், போகப்போக அந்தப் பார்வையில் உடலில் அங்கங்கே வியர்வை பொடிப்பதை உணர்ந்து கொண்டதும், வெகு சிரமப்பட்டு விறைப்புடன் நின்றிருந்தான். “ம்ம்ம்...ஜான் கென்னடி! தேனாம்பேட் இ-த்ரீ ஸ்டேஷன் இல்ல... எம்.எல்.ஏ வீட்ல நடந்த திருட்டை கண்டு பிடித்ததால ப்ரமோஷனாகி கடலூர்ல இருந்து சென்னைக்கு ட்ரான்ஸ்பர் ஆனது நீங்க தானே?”

இந்து அழுத்தம் திருத்தமாக கேட்டதும், “எஸ் மேடம்...!” ஆச்சர்யத்தை விழுங்க முடியாத குரலிலே ஆமோதிக்க... அவனது பாவனையை கண்டு கொள்ளாமல் பக்கவாட்டில் திரும்பியவள், “இவங்க ரெண்டு பேரையும் கூட்டிட்டு என் ஆபிஸுக்கு வந்துடுங்க...” அருகே நின்றிருந்த வெங்கட்டிடம் கூறிவிட்டு ஷூ சத்தம் ஒலிக்க வராண்டாவை கடந்து சென்று விட்டாள். அவள் சென்றதும் மூச்சை இழுத்து விட்டவனை கேலியாக பார்த்த முரளி... “என்னடா மச்சான்! நீ ரொம்ப தைரியசாலி டி.ஸி கிட்டயே அவங்க வயசு என்னன்னு கேட்க போறேன்னு நினைச்சேன். என்னை இப்படி ஏமாத்திட்ட” நண்பனை வம்பிற்கு இழுத்தான்.“டேய்! இப்போ அது தான் முக்கியமா...? எவ்ளோ முக்கியமான கேஸ்ல இன்வால்வ் ஆகிருக்கோம் பேசாம வாடா... இன்ஸ் காதுல விழுந்து வைக்கப் போகுது...” முன்னே சென்று கொண்டிருந்த வெங்கட்டிற்கு கேட்டு விடாமல் தழைந்த குரலில் சொன்னவனை...

“எனக்கேவா?” என்பது போல பார்த்தவன், “சமாளிக்காத ஜான்! டி.ஸியோட பார்வைக்கே உன் யூனிபோம் வெட் ஆனதை நானும் கவனிச்சிட்டு தான் இருந்தேன். இப்பவும் சொல்றேன் இந்துமதி மேடம் எடுத்துகிட்ட கேஸை மட்டும் இல்ல... அந்த கேஸ்ல இன்வால்வ் ஆகிறவங்க டீட்டைல்ஸையும் ஃபிங்கர் டிப்ஸ்ல வைத்திருப்பாங்க...

அதனால தான் சொல்றேன். நாம நம்ம வேலையை மட்டும் பார்க்கிறது எப்பவும் நல்லது ஜான்!” தோழனின் தோளில் கரத்தை போட்டபடி கூற...

“நீ சொல்றதும் சரிதான்டா முரளி...!” ஜானிடமிருந்து வார்த்தைகள் வாடி வதங்கி வந்தன. டெபுட்டி கமிஷனர் அலுவலகம். சாத்தப்பட்ட கண்ணாடி அறைக்குள் வெங்கட், முரளி, ஜான் மூவரும் மேசையை சுற்றி அமர்ந்திருக்க... அவர்களுக்கு எதிரேயிருந்த நாற்காலியில் அமர்ந்திருந்த இந்துவின் குரல் கணீரென்று அதே நேரத்தில் நயமாக ஒலித்துக் கொண்டிருந்தது.

“டீம் ! ஸ்ரீஷா ஆக்ஸிடென்ட் கேஸ்ல வி ஆர் ஆல் கோன வொர்க் டுகெதர்...” மூவரின் முகத்தையும் பார்த்து சம்ப்ரதாயமாக துவங்கி, “லெட் மீ மேக் தி இன்ட்ரொடக்ஷன் பிரஸ்ட். இன்ஸ்பெக்டர் வெங்கட்ராமன் கிரைம் பிரான்ச், சப்-இன்ஸ்பெக்டர் முரளி கிரைம் பிரான்ச், சப்- இன்ஸ்பெக்டர் ஜான் கென்னடி எக்கனாமிக்ஸ் அபன்ஸ்... அண்ட் டி.ஸி.பி இந்துமதி, இட்ஸ் மி... அம் கோயிங் டு லீட் திஸ் டீம் அண்டர் மை இன்வெஸ்ட்டிகேஷன்... கேஸ் டீடைல்ஸ் எல்லாம் உங்க மூணு பேருக்கும் தெரிஞ்சிருக்கும் நினைக்கிறேன். தெரியலன்னா ஏ.ஸி. செல்லப்பா இந்த கேஸை என்கொயர் பண்ணி சம்மிட் பண்ண ரிப்போர்ட் இது தான் படித்து தெரிந்துகொள்ளுங்க...” கையிலிருந்து கோப்பை மேசைமேல் போட்டுவிட்டு எதிரே இருந்தவர்களை அமைதியாக பார்த்தவளிடம் மூவருமே தேவை இல்லை என்று மறுத்துவிட அவளது பேச்சு தொடர்ந்தது.
“செல்லப்பா, ரிப்போர்ட் நமக்கு எந்த அளவிற்கு யூஸ் ஆகுமான்னு எனக்கு தெரியலை... சோ, இந்த நிமிஷத்துல இருந்து ஸ்ரீஷாக்கு நடந்தது விபத்துங்கிறதை நாம மறந்துட்டு இந்த கேஸை நியூ ஆங்கிளில் விசாரிக்க போறோம் அண்ட் மோர் ஓவர், திஸ் கேஸ் இஸ் ஹைலி கான்பிடன்ஷியல்... யூ கைஸ் ஹேவ் டு மெயின்டெயின் தட்... இந்த கேஸை பற்றிய டீட்டைல்ஸ் எதுவும் உங்க மூலமா மீடியாவுக்கோ, பிரஸ்க்கோ லீக் அவுட் ஆகக்கூடாது அண்டர்ஸ்டாண்ட்...?” அழுத்தமாக சொல்லிவிட்டு அவள் எழுந்து கொள்ள... “எஸ் மேடம்...” கோரஸாக சொன்ன மூவரும் அவசரமாக எழுந்து நின்றனர்.

“மேடம்! ஒரு டவுட் கேட்கலாமா...?” ஜானிடமிருந்து வார்த்தைகள் தயங்கி வெளிவந்ததில், இந்து என்ன என்பது போல் பார்க்க... “நீங்க சொன்ன மாதிரி ஏ. ஸி கொடுத்திருக்க ரிப்போர்ட்ல நமக்கு எந்த லூப்ஹோலும் கிடைக்கலை. அதை தாண்டி இன்வெஸ்டிகேஷனை நாம எங்கிருந்து எப்படி ஆரம்பிக்க போறோம்...?” கண்களில் மின்னிய ஆர்வத்துடன் கேட்டவனை பார்த்து மர்மமாக தனக்குள் புன்னகைத்துக் கொண்டவள்... மூளைக்குள் அவர்களிடம் பகிர்ந்துக்கொள்ளப் படாத பலவித யோசனை அலைந்து கொண்டிருந்தது.அதை வெளிக்காட்டாமல் “ரைட் நொவ், வில் ஸ்டார்ட் ப்ரம் கலக்டர்ஸ் பாமிலி ...! கம் ஆன், லெட்ஸ் கோ...” உற்சாகமா சொன்னவள், உடல் மொழியில் தெரிந்த உத்தியோகத்தின் சுறுசுறுப்பு ஆண்களையும் தொற்றிக் கொள்ள பரபரத்து கிளம்பினர்.

தொடரும் :-

எழுத்தாளர்
அனுஅசோக்

## உதடுகள் ஒட்டாத திருக்குறள்:

யாதனின் யாதனின் நீங்கியான் நோதல் அதனின் அதனின் இலன் என்ற குறளாகும்.

இதற்கு என்ன அர்த்தம் என்றால், எந்த பொருளாக இருந்தாலும் அதில் நாம் ஓரளவு தூரம் இருக்கவேண்டும். அதாவது ஒரு ஈடுபாடு இல்லாமல் கொஞ்சம் தூரமாக வைத்துகொண்டால் அதன் மூலம் நமக்கு துன்பம் வராது என்று இந்த திருக்குறள் மூலம் எடுத்துரைக்கிறது.

உ

(6) (1)

## பணிவும் - எதிரிகளை வெல்லும்

**கேட்டதில் பிடித்தது:-**

மகாபாரத போரில் கௌரவர்களின் பக்கம் நின்ற குரு - துரோணாச்சாரியாரின் மகன் அஸ்வத்தாமன், நாராயண அஸ்திரத்தை பாண்டவர்கள் மீது ஏவினான். நாராயண பாணமானது எத்தகைய மாகவீரனையும், தேவர்களையும், அசுரர்களையும் அழிக்கும் வல்லமை பெற்றது.

அர்சுனன் அலறினான், கண்ணா என் - செய்வேன், அஸ்வத்தாமன் நாராயண பாணத்தை எடுக்கிறான். அந்த பாணத்திற்கு நிகராகவோ, அதை எதிர்க்கவோ எந்த ஆயுதமும் யாரிடமும் இல்லை. இப்போது என்ன செய்வது. கண்ணா! ஏதேனும் வழி இருந்தால் கூறு! என கண்ணனை சரணடைந்தான்.

கண்ணனோ, சாதாரணமாக, ஒன்றும் செய்ய வேண்டாம், அனைவரும் மண்டியிட்டு, மண்ணை நோக்கி தலை குனிவீர்களாக! என உத்தரவிட்டான். அனைவரும் அவ்வாறே செய்தார்கள். பீமன் மட்டும் அடிபணிவதா? மண்டியிடுவதா? தலை குனிவதா? மாட்டேன், அது

நம் வீரத்திற்கு இழுக்கு என்று கூறினான். கண்ணன் அவன் தலை மீதே ஒரு குட்டு வைத்து இது வீரத்திற்கான நேரமில்லை, விவேகத்திற்கான நேரம். சொன்னதை செய் என்றான் கண்ணன்.

சொன்னது கண்ணன் ஆயிற்றே, இப்போது பீரவா பிடியும், பீமனும் அவ்வாறே செய்தான். இப்போது ~~அனைவரும் மண்டியிட்டு தலை~~ கண்ணன் உட்பட அனைவரும் மண்டியிட்டு தலை குனிந்திருக்க, அஸ்வத்தாமன் நாராயண பாணத்தை ஏவ சரியாக இருந்தது. ஆனால் அது யாரையும் தாக்காமல், அஸ்வத்தாமனிடமே திரும்ப சென்றது.

ஆச்சரியம்

பாண்டவர்களுக்கோ ஒரே அதிர்ச்சி, எதை அழிக்கும் வல்லமை கொண்ட நாராயண பாணம் ஒன்றும் செய்யாமல் திரும்பி சென்றதே என்று கண்ணனிடம் சென்று காரணத்தை கேட்டனர். அதற்கு கண்ணன் விளக்கினான்:-

நாராயண பாணம் மிகவும் சக்திவாய்ந்த, யாரையும் அழிக்கும் வல்லமை இருந்தாலும், தன்னை எதிர்பவர்களை மட்டுமே அது தாக்கும் என்றான். நாம் அதை எதிர்க்காத போது அது நம்மை ஒன்றும் செய்யாது என்றான்.

அதனால் தான் உங்களை நான் மண்டியிட்டு, தலை குனியுமாறு கூறினேன். நானும் அவ்வாறே செய்தேன். இல்லை என்றால் அது என்னையும் அழித்திருக்கும் என்றான் கண்ணன்.

மேலும், வீரம் எதிர்ப்பது மட்டுமல்லை, பணிவதும் வெற்றியை தரும் என்றான் பீமனிடம். அப்போது தான், பீமன் தான் நினைத்தது தவறு என்று உணர்ந்தான்.

நீதி: எதிர்த்து போரிடுவது மட்டுமல்ல, பணிவும் எதிரிகளை வெல்லும்.

நன்றியுடன்
பத்மா தினேஷ்.

# நான் அறிந்த ஒன்று



**திருமதி ரேவதி சுகுமாறன்**

என்னுடைய நண்பர் ஒரு புத்தகத்தைப் பரிந்துரை செய்தார்.அந்த புத்தகத்தின் பெயர் “ஒன் திங்க்(One Thing)”. ஆசிரியர்கள் - கேரி கெல்லர்(Gary Keller) and ஜே பாபசன் (Jay Papasan).

ஒன் திங்கில், ரியல் எஸ்டேட் தொழிலதிபர் கேரி கெல்லர், அசாதாரண வெற்றிcகான திறவுகோல், பல திசைகளில் உங்களைச் சிதறடிcபதை விட, உங்கள் இலக்கை அடைவதற்கு மிகவும் முக்கியமான "ஒரே விஷயத்தில்" தினசரி கவனம் செலுத்துவதாக வாதிடுகிறார். கெல்லரும் இணை ஆசிரியருமான ஜே பாபசன், உங்கள் குறிக்கோள் அல்லது வாழ்க்கை நோக்கத்தை எவ்வாறு தீர்மானிப்பது என்பதை விளக்குகிறார்கள்.

இந்தப் புத்தகத்தில் நம்முடைய அன்றாட வேலைகளை எவ்வாறு கையாள்வது மற்றும் முக்கியமான வேலையைக் கண்டறிந்து அதை எவ்வாறு சிறப்பாகச் செய்வது பற்றி ஆசிரியர் பல வழிமுறைகளைக் கொடுத்துள்ளார்.
நாம் அனைவரும் “பல்பணி (Multitasking)” செய்ய விரும்புவோம் அவ்வாறு செய்பவர்களை அதிசயமாகப் பார்ப்போம். ஆனால் உண்மையில் “பல்பணி” என்பது ஒரு கட்டுக் கதை (myth)

உண்மையில் Multitasking என்னும் சொல் கணிணியில் பயன்படுத்துவார்கள்.கணிணி பல வேலைகளை கண் இமைக்கும் நொடியில் செய்வதால் இந்த பெயர் வந்தது. ஆனால் மனிதனால்,மனித மூளையால் கணிணியை போல் பல வேலைகளை ஒரே நேரத்தில் சிறப்பாகவும் விரைவாகவும் செய்ய முடியாது.

உதாரணம், நாம் ஒரு கடிதம்எழுதிக் கொண்டிருக்கிறோம், திடீரென்று அலைபேசியில் அழைப்பு வருகிறது. அலைபேசியில் நண்பரிடம் உரையாடிவிட்டு பின்பு கடிதம் எழுத ஆரம்பிக்கும் போது எங்கு முடித்தோமோ அங்குத் தொடங்க முடியுமா? ஒரு முறையாவது நாம் வரைந்த கடிதத்தை முதலில் இருந்து படித்தால் தான் நம்மால் தொடங்க முடியும். ஆனால் கணிணியால் எங்கு அந்தச் செயல் விடப்பட்டதோ அங்கிருந்து அதனால் தொடங்க முடியும்.

நிறைய ஆராய்ச்சிகள் Multitasking மற்றும் Single task செய்பவர்களோடு ஒப்பிடப்பட்டது.Single task செய்பவர்களின் நேர்த்தி மிகவும் சிறப்பாக இருந்தது. Multitasking செய்பவர்களின் வேலை அரைகுறைத்தனமாக இருந்தது.

அதனால் இதிலிருந்து நான் தெரிந்து கொண்டது எந்த ஒரு வேலையைச் செய்தாலும் அதில் முழு கவனம் செலுத்தி திறம்பட செய்ய முயற்சிக்க வேண்டும்.

நமக்கு அன்றாடம் பல வேலைகள் செய்வதற்கு இருக்கும். ஆனால் சில வேலைகள் முக்கியமானதாக இருக்கும். அதிலும் குறிப்பிட்ட சில முக்கியமானதாகும். அதை அறிந்து முழுக் கவனம் செலுத்தி உங்களின் ஒவ்வொரு நொடியையும் பயனுள்ளதாக மாற்றுங்கள்.

எனக்கு வாய்ப்புக் கொடுத்த அனைவருக்கும் நன்றி!

உ

(1)

## பணிவும் - எதிரிகளை வெல்லும்

கேட்டதில் பிடித்தது:-

மகாபாரத போரில் கௌரவர்களின் பக்கம் நின்ற குரு - துரோணாச்சாரியாரின் மகன் அஸ்வத்தாமன், நாராயண அஸ்திரத்தை பாண்டவர்கள் மீது ஏவினான். நாராயண பாணமானது எத்தகைய மாகவீரனையும், தேவர்களையும், அசுரர்களையும் அழிக்கும் வல்லமை பெற்றது.

அர்சுனன் அலறினான், கண்ணா என் - செய்வேன், அஸ்வத்தாமன் நாராயண பாணத்தை எடுக்கிறான். அந்த பாணத்திற்கு நிகராகவோ, அதை எதிர்க்கவோ எந்த ஆயுதமும் யாரிடமும் இல்லை. இப்போது என்ன செய்வது. கண்ணா! ஏதேனும் வழி இருந்தால் கூறு! என கண்ணனை சரணடைந்தான்.

கண்ணனோ, சாதாரணமாக, ஒன்றும் செய்ய வேண்டாம், அனைவரும் மண்டியிட்டு, மண்ணை நோக்கி தலை குனிவீர்களாக! என உத்தரவிட்டான். அனைவரும் அவ்வாறே செய்தார்கள். பீமன் மட்டும் அடிபணிவதா? மண்டியிடுவதா? தலை குனிவதா? மாட்டேன், அது

# Best Wishes From


Culture & Cuisine
An Authentic Experience

**Home Style South Indian Catering,Training and Events**

Revathy Sukumaran
+1(720)362-0873
revathys@cultureandcuisinellc.com
www.cultureandcuisinellc.com

Follow us on

@cultureandcuisinellc